# பண்பாட்டு அறக்கவலையும் குறுந்தொகையின் உரைப்பதிப்புகளும்

# Cultural Concern and Textual Versions of the Short Story

***த. செல்வராஜ்***
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை

**T. Selvaraj**
*Ph.D. Scholar*
*Tamil Department*
*Government Arts College, Udumalaipettai*

## ஆய்வுச் சுருக்கம்

*உடல் உறுப்புகள், பாலுணர்வுகள் மற்றும் பாலுணர்வுச் செயல்பாடுகளைச் சுட்டிக்காட்டும் பல சொற்கள் இச்சமூகத்தின் புழக்கத்தில் உள்ளன. இச்சொற்கள் கெட்ட வார்த்தைகளாய் சமூகத்தால் மாற்றம் பெற்றுவிட்டன. காலமாற்றத்தில் நல்லது x கெட்டது, சிறப்பானது x சிறப்பற்றது என்னும் கருத்துநிலை ஆதிக்கம் சொற்களுக்குள்ளும் புகுந்தது. இதனால் நல்ல வார்த்தை x கெட்ட வார்த்தை என்னும் பிரிப்புகள் ஏற்பட்டன. பெண்ணின் பிறப்புறுப்பைக் குறிக்க சங்க இலக்கியங்களில் 'அல்குல்' என்ற சொல் நூற்றிரண்டு இடங்களில் இயல்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ள தன்மையினைக் காணமுடிகிறது. 'அல்குல்' என்ற சொல்லிற்கு 'பெண்குறி' என்று சென்னைத் தமிழ் இணையப் பேரகராதியும், கழகத் தமிழ்க் கையகராதியும் பொருள் உரைக்கின்றன. இச்சொல் கெட்ட வார்த்தையாகக் கருதப்படுகிறது. பண்பாட்டு அறக்கவலையின் காரணமாக, கல்விப் புலத்தில் இச்சொல்லுக்கான பதவுரை பெரும்பான்மையான இடங்களில் விளக்கப்படுவதில்லை. சங்க இலக்கியப் பனுவலான குறுந்தொகை ஆய்வுப் பதிப்பு, மக்கள் பதிப்பு மற்றும் மாணவர் பதிப்பு என பல நிலைகளில் அச்சிடப்பட்டு வாசிப்புத் தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. பண்பாட்டு அறக்கவலை 'அல்குல்' என்ற சொல் மீது நிகழ்த்திய மாறுதல்களை குறுந்தொகைக்கு எழுந்த உரைப்பதிப்புகளின் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## Abstract

*There are many words in circulation in the society that refer to organs, sexual sensations and sexual functions. These words have been transformed into bad words by society. In the course of time, the concept of good × bad, good, good × ill entered into words. This led to the separation of good word × bad word. In the Sangam literature, the word 'Alkul' is used naturally in one hundred and two places to refer to the genitalia of a woman. The word 'Alkul' is interpreted by the Chennai Tamil Internet Dictionary and the Tamil Dictionary of the Kazhagam as 'Penkuri'. This word is considered a bad word. Due to cultural concerns, the term is not explained in most places in the field of education. It was printed at various levels, such as the Sangam literary text, the Short Volume Research Edition, the People's Edition and the Student Edition, and was taken to the reading floor. This article examines the changes that cultural ethics has made to the word 'al-Qul' through the textual editions that have arisen for the short volume.*

***முக்கியச்சொற்கள்:*** *கெட்ட வார்த்தை, அல்குல், குறுந்தொகை, மூலபாடம், சி.வை.தா., சௌரிப்பெருமாள் அரங்கனார், உ.வே.சா., புலியூர்க்கேசிகன், பண்பாட்டு அறக்கவலை.*

***Keywords**: Bad Word, Al-kul, Short Story, Moolapaadam, C.V.T. Souriperumal Aranganar, U.Ve.Sa., Puliyur Kesikan*

**Citation**

Selvaraj, T. "Cultural Concern and Textual Versions of the Short Story." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 62–67.

**ஆய்வுப் பதிப்புகளும் மூலபாட மாற்றங்களும்**

*பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தொழிற்பட்ட பதிப்பாசிரியர்களும் உரையாசிரியர்களும் 'அல்குல்' என்னும் சொல்லை எதிர்கொண்ட முறைமை முக்கியத்துவமானது. குறுந்தொகையில் ஒன்பது பாடல்களில் 'அல்குல்' என்ற சொல் இடம்பெற்றுள்ளது. குறுந்தொகையை முதன் முதலில் உரை எழுதிப் பதிப்பித்த தி.சௌரிப்பெருமாள் அரங்கனார் குறுந்தொகையின் மூலபாடத்தில் சில திருத்தங்களை மேற்கொண்டார். இதனை,*

***இடக்கர்ச்சொல்லாகிய குஃறொடர்ரன்மொழி இந்நூலகத்து ஒன்பதிடத்து வந்திருந்தமையின், அவற்றை அறவொழித்துச் செய்யுளிற் குறைவுதோன்றாவாறு ஏற்றவற்றை என் சிற்றறிவிற்கு எட்டியவாறு சேர்த்து அதற்கேற்ப உரையெழுதி இருப்பதும் ஒன்று. இங்ஙனஞ் செய்தமைக்குக் காரணம் பழந்தமிழ் நூல்கள் பலவற்றைத் தமிழுலகிற்குத் தந்த தக்காராகிய ஸ்ரீமான்:சி.வை.தாமோதரம் பிள்ளையவர்கள் கலித்தொகையகத்து மாற்றி வைத்துக் காட்டிப் போந்த காரணமேயாகும்.***

***(1915, குறுந்தொகைப் பதிப்பின் முன்னுரை)***

*என்னும் அவரது பதிப்புரை வெளிப்படுத்துகிறது. அல்குல் என்னும் சொல்லிற்குப் பதிலாக ஆகம் (மார்பு), மருங்கல் (இடை), ஆடை, தோள் என மாற்றுச் சொற்களையிட்டு பதிப்பித்திருக்கிறார். அதற்கேற்பவே உரையும் வகுத்துள்ளார். சௌரிப்பெருமாள் அரங்கனார் கெட்ட வார்த்தை என்பதை உணர்த்தவே அல்மொழி என்று குறிப்பிடுகிறார். சி.வை.தா. (கலித்தொகைப் பதிப்புரை) சொல்லும் காரணமே குறுந்தொகையின் மூலபாடத்தினை மாற்றியமைக்கக் காரணம் என்கிறார். சி.வை.தா. சொல்லும் காரணம் பின்வருமாறு,*

***இந்நூல் துரைத்தன வித்தியாசாலைகளிலும், பிற கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் பயிலல் வேண்டுமென்னும் அவாவினாற் தற்காலம் அவையிற்றுக்கு இணங்காததோர் இழிசொல்லும் மகளிரின் சிறப்பவயவத்தின் இடக்கர்ப் பெயருமாகிய குஃறொடர்ந்த அன்மொழி இந்நூல் முழுவதினும் பதினோரிடத்திற் பிரயோகிக்கப்பட்டதை ஒழித்துஞ் செய்யுள் ஊனமுறா திருத்தற் பொருட்டு அதற்குப் பதிலாக அவ்விடத்திற்கு இசைந்தபிற அவயவத்தின் பெயரைச் சந்தத்திற்கு வேண்டிய அளவு விசேணத்தோடு புணர்த்தியும் இருக்கிறேன்***

***(1887, கலித்தொகைப் பதிப்புரை)***

*அமைகிறது. பதிப்பாசிரியர்கள் வாசகர் மையத்தை நோக்கியதால் பண்பாட்டு அறக்கவலை அவர்களைப் பற்றிக் கொண்டது. இதனால், பல்லாண்டு காலம் சுவடி வழியாகத் தொடர்ந்து வந்த 'அல்குல்' என்னும் சொல் இக்காலகட்டத்தில் மாற்றத்தைச் சந்தித்தது.*

**மக்கள் பதிப்பும் உரை வெளியீடும்**

*அனைவரும் எளிதில் கற்றுணரத்தக்க வகையில் எளிய நடையில் உரை எழுதியவர் புலியூர்க் கேசிகன். தமிழ்ச்சூழலில் இவரது உரைகளின் மீது கட்டமைக்கப்பட்ட கருத்துருகள் இவரது உரைகளைப் புறந்தள்ளக் காரணமாகின.*

***தமிழிலக்கிய ஆய்வாளர்கள் இதுகால வரை, ஒவ்வொரு நூலும் தோன்றிய காலப் பகுதியில் அதற்கு இருந்திருக்கக்கூடிய அதஞீடிநுணஞிநு, கேட்குநர், வாசகர், சுவைஞர் ஆகியோரது ஏற்புடைமை நிலையினின்று நூலின் பண்புகளை விளக்கவில்லை. வெவ்வேறு காலத்து வாசகர்கள் வெவ்வேறு விடயங்களையும் விழுமியங்களையும்***

***இலக்கியத்திலிருந்து எதிர்ப்பார்க்கின்றனர். இலக்கியம் காலம் கடந்தது என்று தத்துவம் பேசுவதில் பயனெதுவுமில்லை***

***(சமூகவியலும் இலக்கியமும், கைலாசபதி.க, பக்.26-27)***

*இத்தன்மையில் புலியூர் கேசிகனாரின் உரைகளை அணுக வேண்டியது அவசியம். கடின நடை x எளிய நடை, பதிப்பு x வெளியீடு, ஆராய்ச்சிப் பதிப்பு x மக்கள் பதிப்பு போன்ற வேறுபாட்டு நிலைகளின் புரிதலோடு இவரது உரைகளை ஆராய்வது முக்கியத்துவமானது.*

*புலியூர்க் கேசிகனின் குறுந்தொகைக்கான தெளிவுரை 1965-இல் வெளிவந்தது. இதே நேரத்தில் குறுந்தொகை பாடத்திட்டமாகவும் பயிலப்பட்டு வந்தது. தம் பதிப்பின் முன்னுரையில், ஆற்றல்சான்ற பேராசிரியர்களின்அருமுயற்சிகளும்பதிப்புகளும்குறிப்புகளும்எமக்குத்துணை நின்று உதவின (புலியூர்க் கேசிகன் - குறுந்தொகைப் பதிப்பின் முன்னுரை) என்கிறார். 1915-இல் குறுந்தொகைக்கான முதல் உரைப் பதிப்பு வெளிவந்தது தொடங்கி, அவர் உரையெழுதி வெளியிடும் காலத்திற்கு முந்தைய பதிப்புகள் பற்றிய குறிப்புகளை அவர்தம் பதிப்பு முன்னுரை விளக்குகிறது. ஆனால், சௌரிப்பெருமாள் அரங்கன் செய்த மூலபாட மாற்றங்களைப் பற்றி எக்கருத்தையும் இவரது பதிப்புரை விளக்கவில்லை. எந்தப் பதிப்பின் அடிப்படையில் இவர் மூலபாடங்களைத் தேர்ந்தெடுத்தார் என்பதைப் பற்றிய குறிப்புகளையும் காண முடியவில்லை.*

| *பா.எ.* | *சௌரிப் பெருமாள் அரங்கனார் (1915)* | *உ.வே.சா. (1937)* | *புலியூர்க் கேசிகன் (1965)* |
|---|---|---|---|
| *27* | *திதலை யாகத்தென்* | *திதலை யல்குலென்* | *திதலை அல்குல்என்* |
| *101* | *மாண்வரியாகக்* | *மாண்வரி யல்குற்* | *மாண்வரி அல்குல்* |
| *125* | *றழையணி யாடை மருங்குண்* | *றழையணி யல்குன்* | *தழைஅணி அல்குல்* |
| *159* | *தழையணி யாடை தாங்கல்* | *தழையணி யல்கு றாங்கல்* | *தழைஅணி அல்குல் தாங்கல்* |
| *180* | *பெருந்தோ ளவ்வரி வாடத்* | *யல்குல் அவ்வரி வாடத்* | *அல்குல் அவ்வரி வாடத்* |
| *214* | *திருந்திழை யுடைக்குப்* | *திருந்திழை யல்குற்குப்* | *திருந்துஇழை அல்குற்குப்* |
| *274* | *மணிமிடை மருங்குன்* | *மணிமிடை யல்குன்* | *மணிமிடை அல்குல்* |
| *294* | *தித்தி பரந்த பனையெழின் மென்றோ டிருந்திழை* | *தித்தி பரந்த பைத்தக லல்குற் றிருந்திழை* | *துத்திப் பாந்தள் பைத்து அகல் அல்குல்* |
| *345* | *தழைதாழ் மருங்கு லிவள்புலம்* | *தழைதா ழல்கு லிவள்புலம்* | *தழைதாழ் அல்குல் இவள்புலம்பு* |

*புலியூர்க் கேசிகனார் உரைப்பதிப்புகள் 'மக்கள் பதிப்பு' என்னும் நிலையில் சந்தி பிரிப்புகளோடு வெளிவந்தன. இவர் கொண்ட பாடங்கள் உ.வே.சா. கொண்ட பாடங்களோடு ஒத்தும், சௌரிப் பெருமாள் அரங்கனார் கொண்ட பாடங்களோடு வேறுபட்டும் உள்ள தன்மையைப் பார்க்க முடிகிறது. சௌரிப் பெருமாள் அரங்கன் இடக்கர்ச் சொல்லாகிய 'அல்குல்' என்னும் சொல்லை மாற்றிப் பதிப்பித்தார்.*

*இத்தகு மாற்றத்தை ஆராய்ச்சிப் பதிப்பை வெளியிட்ட உ.வே.சா.வும், மக்கள் பதிப்பை வெளியிட்ட புலியூர்க் கேசிகனாரும் செய்யவில்லை. 'அல்குல்' என்னும் சொல்லை அப்படியே கையாண்டுள்ளனர். ஒவ்வொரு காலத்திலும் நிகழும் பண்பாட்டு அறக்கவலைகளுக்கு ஏற்ப சங்க இலக்கிய பழம்பனுவல்களின் சொற்களை மாற்றிக் கொண்டே போனால் சாறுபிழியப்பட்டு சக்கை மட்டும்தான் மிஞ்சும் அ.சதீஸ் (மாற்றுவெளி ஆய்விதழ்-15, ப.19) என்னும் கருத்து மூலபாட மாற்றத்தால் ஏற்படும் சிக்கலை வெளிக்காட்டுகிறது.*

*உ.வே.சா. குறுந்தொகை உரையில் 'அல்குல்' என்னும் சொல்லுக்குப் பொருள் உரைக்கவில்லை. அக்காலத்தவருக்கு எளிதில் புரியும் என்பதால் மூலச்சொற்களை அப்படியே விளக்க உரையில் கையாண்டுள்ளார் எனலாம். ஆனால், பதவுரையைத் தருமிடத்தில், திதலை அல்குல் - ,(குறு.27), அல்குல் - ,(குறு.180), அல்குற்கு -, (குறு.294) என்று பதத்திற்கான பொருளைத் தராது கடந்து செல்லும் போக்கைக் காண முடிகிறது. இது குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.*

*புலியூர்க் கேசிகனார் பாடலுக்கான உரையில், தேமற் புள்ளிகளைக் கொண்ட அல்குல் தடத்தையுடைய (குறு.27), மாட்சிமைப்பட்ட வரிகளையுடைய அல்குல் தடத்தை உடையவள் (குறு.101), தழையினை அணிந்த அல்குல் தடத்தையுடைய (குறு.125), தழையுடை அழகு செய்யும் அல்குல் தடத்தை (குறு.159), நம் அல்குலது (குறு.180), ஆபரணங்களை அணிந்த அல்குலிடத்தே (குறு.214), அணிகளை அணிந்திருக்கும் அல்குல் தடத்தினை (குறு.274), அகற்சியை உடைய அல்குலிடத்தே (குறு.294), தழையுடை தாழ்ந்த அல்குல் தடத்தை (குறு.345) என்று மூலச்சொற்களையே தம் உரையிலும் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால், பதத்துக்கான பொருளை அவர் விளக்கவில்லை. இவரது பண்பாட்டு அறக்கவலை உரையில் மூலச்சொற்களைப் பயன்படுத்தும் நிலையில் வெளிப்படுகிறது. இந்நிலையில் இவரது உரை உ.வே.சா. உரையோடு ஒத்திருப்பதைக் காண முடிகிறது.*

**முடிவுரை**

*செவ்விலக்கிய நூல்கள் அச்சில் பதிப்பிக்கப்படும் பொழுதே, அவை கல்வி நிறுவனங்களில் பாடத்திட்டமாகவும் வைக்கப்பட்டன. இதனால் குறுந்தொகையில் ஒன்பது இடங்களில் பயன்பட்டு வந்த பெண்ணின் அவயவமான 'அல்குல்' பதிப்பாசிரியர்கள் மற்றும் உரைகாரர்களின் பண்பாட்டு அறக்கவலைக்கு உள்ளானது. எனவே, மூலத்தைச் சிதைத்து பதிப்பித்தும் அதற்கேற்ப உரையும் வகுத்தனர். 'மக்கள் பதிப்பு' என்னும் நிலையில் உரை எழுதி வெளியிட்ட புலியூர்க் கேசிகன் சொற்களைச் சிதைக்காதும் உரைகளில் விளக்கம் தராமலும் வெளியிட்டார். கால மாற்றமும் பண்பாட்டு அறக்கவலையும் சங்க இலக்கியச் சொற்களைச் சிதைத்துப் பதிப்பகவும் உண்மையான பொருளை உரைக்காது உரை எழுதும் தன்மைக்கும் பதிப்பாசிரியர்கள் மற்றும் உரையாசிரியர்களை அழைத்துச் சென்றிருக்கிறது. கால மாற்றத்திற்கேற்ப சொற்களைச் சிதைக்காது பதிப்பிப்பதும் உரை எழுதுவதும் ஒவ்வொரு பதிப்பாசிரியர் மற்றும் உரையாசிரியரின் கடமை.*

**துணைநூற் பட்டியல்**


1. *சாமிநாதையர், உ.வே., குறுந்தொகை, முதற்பதிப்பு 1937, கேஸரி அச்சுக்கூடம், சென்னை.*

2. *திருமாளிகைச் சௌரிப்பெருமாளரங்கன், குறுந்தொகை, முதற்பதிப்பு 1915, வித்யாரத்தனாகர அச்சுக்கூடம், வேலூர்.*
3. *புலியூர்க்கேசிகன், குறுந்தொகை தெளிவுரை, மறுபதிப்பு 2014, பாரி நிலையம், சென்னை.*
4. *பெருமாள் முருகன், கெட்ட வார்த்தை பேசுவோம், இரண்டாம் பதிப்பு 2022, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.*
5. *கைலாசபதி, க., சமூகவியலும் இலக்கியமும், மறுபதிப்பு 2009, குமரன் புத்தக இல்லம், சென்னை.*

**இதழ்**

1. *மாற்றுவெளி ஆய்விதழ் 15 - தமிழ் அச்சுப் பண்பாடு சிறப்பிதழ், டிசம்பர் 2014, பரிசல் புத்தக நிலையம், சென்னை.*

**அகராதி**

1. *கழகத் தமிழ்க் கையகராதி, முதல் பதிப்பு, நவம்பர் 1940, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.*

***இணையதளம்***

1. https://www.APµ•u¼.com
2. https://www.solalvallan.com

**References**

1. *Swaminathaiyar, U.Ve., Short Story, First Edition 1937, Kesari Printing Press, Chennai.*
2. *Thirumaligai SouriPerumalarangan, Kurunthogai, First Edition 1915, Vidyarathanagara Printing Press, Vellore.*
3. *Puliyur Kesikan, Kurunthogai Thelivurai, Reprint 2014, Pari Nilayam, Chennai.*
4. *Perumal Murugan, Kettavarthai Pesavom, Second Edition 2022, Kalachuvadu Publishing House, Nagercoil.*
5. *Kailasapathy, K., Samoogaviyalum Ilakiyamum, Reprinted 2009, Kumaran Book House, Chennai.*
6. *Matruveli Aivithal 15 – Tamil Achu Panpadu Sirapithal, December 2014, Parisal Book Centre, Chennai.*
7. *Kazhagam Tamil Kaiagarathi, First Edition, November 1940, South Indian Saiva Siddhanta Noorpathippu Kazhagam, Tirunelveli.*

**Website**

1. *https://www.solalvallan.com*